[1973 மார்ச் 29

வேறு பல வசதிகள் செய்வதில் இராமநாதபுரம் மாவட்டம் கவனிக் கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அவ்வப்போது அறிவார்கள்.

Low-lying areas in Madurai

*554 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to prevent the flooding of the low-lying streets during rainy seasons in the City of Madurai?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரையில் மழை தண்ணீர் வடிகால்கள் கட்டுவதற்கு ரூ. 115 லட்சங்கள் செலவாகும் திட்டமொன்று பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதுமாதிரி சென்னை நகரில் லோ லையிங் ஏரியாக்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மதுரையில் மதுரை மத்திய பகுதியிலும் பஸ் ஸ்டாண்டிலும் சிறு மழை பெய்தால் கூட தண்ணீர் அதிகம் தேங்கிவிடுகிறது. இதை, திட்ட அடிப்படையில் என்று சொல்லாமல் இந்த ஆண்டிலாவது அதை ஒரளவிற்குக் குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரை நகரத்தில் நடுப்பகுதியில் கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் மக்கள் இருப்பார்கள் என்ற கணக்கின் அடிப்படையில் 1942-ல் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இப்போது $5\frac{1}{2}$ லட்சம் மக்கள் மதுரை நகரில் வாழ்கிறுர்கள். நாள் ஒன்றுக்கு பத்து மில்லியன் காலன் கழிவு நீர் வருகிறது. எனவே அமைந்திருக்கும் வடிகால் திட்டம் கொண்டு இத்தகைய கழிவு நீரையும் மழை நீரையும் இரண்டும் சேரும்போது அதை அப்புறப் படுத்தமுடியாமல் இருக்கிறது. அதை சீர்படுத்தி அமைத்தால்தான் மழை நீரோடு கழிவு நீர் சேருவதை தடுக்க முடியும். வீதிகளில் உள்ள தண்ணீரை அகற்ற நகராட்சி வடிகால் திட்டத்தை நிறை வேற்ற உத்தேசித்துள்ளது. 1968-ல் ரூ. 5,90,000 செலவில் இந்த வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போது 115 லட்சம் ரூபாயில் திட்டம் ஒன்று பரிசிலனையில் இருக்கிறது. மதுரையில் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்குவதை கொண்டு செல்லும்

1973 மார்ச் 29]

வகையில், கழிவு நீரைக் கொண்டு செல்லும் அளவிற்கும் தங்கு தடையில்லாமல் கொண்டு செல்ல திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. படிப் படியாக நிறைவேற்றப்படும்.

திரு. த. சோனையா : மதுரையில் தாழ்வான பகுதிகளில் மழைத் தண்ணீர் தேங்கி இருப்பதை அகற்ற திட்டமிடுகிறார்கள். அதில் திடீர் நகர் காமராஜபுரம் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம். 115 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகிறது. படிப்படியாக நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Bus route roads in Nagapattinam

* 555 *Q.*—THIRU A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to take over the bus route roads at present maintained by the Nagapattinam Municipality by the Government? மு.ப 9-30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நகரங்களின் எல்லைக்குள் இருக்கும் பேருந்துகள் செல்லும் சாலைகளை நெடுஞ் சாலைத் துறையின் பொறுப்புக்கு மாற்றுவதென அரசு தீர்மானித் திருக்கிறது.

Poison Information and Treatment Centre at Madras.

* 556 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open a Poison Information and Treatment Centre at the Madras General Hospital; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : ஆம். இத்தகைய நிலையம் ஒன்று சென்னை பொது மருத்துவமனையில் ஏற்படுத்துதல் பற்றிய செயற் குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.